**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.253/2020** **தேதி.10.09.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.4 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு 09.09.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | | திருமதி.S.சோனியா | இனம் | பெண் |
| க/பெ. | | திரு.பிரகாஷ் | ஊர்/வட்டம் | இராணிப்பேட்டை/வாலாஜா |
| வயது | | 36/2025 | தொழில் | மண்டல துணை வட்டாட்சியர் |

துவக்க நேரம் 03.25 P.M

நான் தற்போது வாலாஜா மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். வாலாஜா வட்டாட்சியருக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்றது, வட்டாட்சியர் அவர்கள் என்னை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வாய்மொழியாக கேட்டுக்கொண்டார்.

2. இவ்வழக்கில் தொடர்புடைய சர்வே எண் குறித்த வருவாய் துறை ஆவணங்களின் பதிவேடுகளை எடுத்துவந்து முன்னிலைப்படுத்த கத்தாரிக்குப்பம் கிராம நிர்வாக அலுவலருக்கு வட்டாட்சியர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார், அதன்பேரில் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் சர்வே எண்.114/1 தொடர்பான பதிவேடுகளை என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

3. அழைப்பாணையில், UDR பட்டா வழங்கப்பட்ட பின்பு சர்வே எண்.114/1 தொடர்பான அ–பதிவேடு, கைச்சிட்டா, கணினி சிட்டா, புலப்படம், அகியவற்றையும், UDR திட்டத்திற்கு முன்பு, சர்வே எண்.114/1 தொடர்பான பட்டா விவரம், அ–பதிவேடு ஆவணங்கள் ஆகியவற்றையும், எடுத்துவந்து சமர்பித்து சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டது. இதில் UDR திட்டத்திற்கு முன்பு உள்ள ஆவணங்கள் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பதிவறையில் பராமரிக்கப்பட்டுவருகிறது.

4. தற்பொழுது நான் பின்வரும் ஆவணங்களை, அசல் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து உண்மை நகலாக தாக்கல் செய்கிறேன்.

| வ. எண் | ஆவணம் | தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1 | ச.எண்.114/1 க்கான UDR அ பதிவேடு | சான்றிட்ட நகல் | Ex.X1 |
| 2 | ச.எண்.114/1 க்கான கைக்சிட்டா | சான்றிட்ட நகல் | Ex.X2 |
| 3 | ச.எண்.114/1 க்கான தமிழ் நிலத்திற்கு முந்தைய கணினிச்சிட்டா | சான்றிட்ட நகல் | Ex.X3 |
| 4 | ச.எண்.114/1 க்கான தமிழ்நிலம் கணினி அ பதிவேடு | சான்றிட்ட நகல் | Ex.X4 |
| 5 | ச.எண்.114/1 க்கான தமிழ்நிலம் கணினி சிட்டா | சான்றிட்ட நகல் | Ex.X5 |
| 6 | ச.எண்.114/1 க்கான 1434 பசலி ஆண்டிற்கான அடங்கல் | சான்றிட்ட நகல் | Ex.X6 |
| 7 | ச.எண்.114/1 க்கான புலப்படம் | சான்றிட்ட நகல் | Ex.X7 |

மேற்கண்ட ஆவணங்களை நீதிமன்ற வேண்டுகோளின்பேரில் ஒப்படைத்துள்ளேன். UDR திட்டத்திற்கு முன்பு இருந்த ஆவணங்களை இராணிப்பேட்டை மாவட்ட பதிவறையில் பராமரிக்கப்பட்டுவருகிறது.

5. UDR திட்டம் என்பது 1984 முதல் 1987 காலகட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருவாய் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 1987 க்கு பிறகு செயல்படுத்தப்பட்டு, பராமரிப்பில்கொண்டுவரப்பட்டது. 1984 முதல் 1987

காலகட்டத்தில் சர்வே எண்.114/1 க்கான பட்டா எண்.290 ஆகும். UDR அ–பதிவேட்டின்படி, பட்டா எண்.290, வே.பாஸ்கரராவ், தாமோதரராவ் ஆகிய இருவர் பெயரிலும் கூட்டாக வழங்கப்பட்டு பதிவு செய்யபட்டுள்ளது.

6. கூட்டுப்பட்டா எண்.290 ஆனது டிசம்பர் 2015 க்கு முன்புவரை பராமரிப்பில் இருந்து பழைய கனிணி சிட்டா பதிவேட்டின்படி இரண்டு நபர்களின்பெயரில் கூட்டுப்பட்டாவா இருந்தது. அதன்பிறகு அனைவரும் பார்க்கும்வன்னம் கனிணிமயமாக்கப்பட்டுள்ளது.

7. நீ.ம.சா.ஆ.4 2015 டிசம்பருக்கு பிறகு தயார் செய்யப்பட்டு கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் பராமரித்து வருகிறார். நீ.ம.சா.ஆ.4 ன்படி பட்டா யார் பெயரில் உள்ளது என்றால், பட்டா எண்.1115 ன்படி ஒரு வேதாத்ரி என்பவர் பெயரில் உள்ளது.

8. நீ.ம.சா.ஆ.4 ன்படி ஏற்கனவே இரண்டு நபர்களின் பெயரில் இருந்த கூட்டுப்பட்டா வேதாத்ரி பெயரில் மட்டும் பட்டா எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. பட்டா எண்.1115 க்கான செயல்முறைகள், விசாரணை அறிக்கைகள் குறித்து தனி அறிக்கை மற்றும் ஆவணங்கள் சமர்பிக்கமுடியும் என்றால் இதுகுறித்து பரிசீலித்து அறிக்கை சமர்பிக்கிறேன். ஆவணங்கள் இருந்தாலும் சமர்பிக்கிறேன்.

முடிவு நேரம் 04.25 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.